KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.56

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தூத்துக்குடி மக்களின் மரபுசார் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

Traditional Culture and Customs of the People of Thoothukudi

முனைவர். ம. சித்ரகலா[1,*]

[1] உதவிப் பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

***Corresponding author:** முனைவர். ம. சித்ரகலா, chitrababu1996@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 10 November 2026

Article ID
KIJTS-2026-0040

Peer review
Double-blind peer review

Keywords
Thoothukudi
Traditional Culture
Customs and Beliefs
Minor Deity Worship
Folk Heritage
Native Civilization

ABSTRACT

This research paper, titled "Traditional Culture and Customs of the People of Thoothukudi," aims to explore the unique heritage of the Thoothukudi district, the historical footprints of its people that have attained immortal fame, their spiritual devotion, traditional minor deity worship, cultural festivals, refined civilization, beliefs rooted in native soil, cultural practices and customs, and economic/occupational resources. Culture reflects the lifestyle and organizational systems of people living in society. Traditional culture refers to the unswerving continuation of lifestyle practices followed in society across generations. The people of Thoothukudi have lived by following the paths laid down by their ancestors through beliefs, customs, arts, rituals, and modes of worship. The primary objective of this research is to examine the traditional cultures and customs of the people of Thoothukudi, who live with an unadulterated cultural identity rooted in the native soil and a deep sense of patriotism.

How to cite this article: முனைவர். ம. சித்ரகலா (2026). தூத்துக்குடி மக்களின் மரபுசார் பண்பாடும் பழக்கவழக்கங்களும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 660. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.56
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச்சுருக்கம்

தூத்துக்குடி மக்களின் மரபுசார் பண்பாடும் பழக்கவழக்கங்களும் என்ற இந்த ஆய்வுக்கட்டுரையில் தூத்துக்குடி மாவட்டத்தின் மரபு சார்ந்த சிறப்பு, தூத்துக்குடி மக்களின் அழியா புகழ் பெற்று திகழ்ந்த வரலாற்று தடங்கள், மக்களின் ஆன்மீக பக்தி, மரபுவழி அமைந்த சிறுத்தெய்வ வழிபாடு, பாரம்பரிய விழாக்கள், பண்பட்ட நாகரிகம், மண் மணம் மாறா நம்பிக்கைகள், பண்பாடும் பழக்கவழக்கம், தொழில் வளம் போன்றவற்றை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

முன்னுரை

சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறைகளை வெளிப்படுத்துவது பண்பாடாகும். மரபுவழி பண்பாடு என்பது காலங்காலமாக சமுதாயத்தில் பின்பற்றிவரும் வாழ்வியல் முறைகளை மாற்றாமல் பின்பற்றி வருவது எனலாம். மக்களில் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள் போன்றவைகள் காலம் காலமாக முன்னோர்கள் பின்பற்றிய வழியில் வாழ்பவர்கள் தூத்துக்குடி மக்கள். மண்மணம் மாறாத பண்பாட்டுடனும், நாட்டுப்பற்றுடனும் வாழும் தூத்துக்குடி மக்களின் மரபுசார் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

தூத்துக்குடி

இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் உள்ள மாவட்டங்களில் தூத்துக்குடி ஒரு மாவட்டமாகும். ”திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சில பகுதிகளைப் பிரித்து அக்டோபர் 20, 1986 அன்று வ.உ. சிதம்பரனார் பெயரால் தூத்துக்குடி மாவட்டம் உருவாக்கப்பட்டது. இத்தலம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது எனலாம். நீர் நிறைந்த நிலத்தைத் தூர்த்து, துறைமுகமும், குடியிருப்பும் தோன்றிய ஊர் என்பதால் தூத்துக்குடி என்றாயிற்று. வாகைக்குளம், கங்கைகொண்டான் கல்வெட்டுக்களில், இவ்வூரைத் 'தூற்றிக்குடி' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.” அதாவது கடலிலிருந்து 'தூர்த்துக்' எடுக்கப்பட்ட நீர் நிறைந்த நிலத்தை மீட்டு எடுத்த நிலப்பகுதி என்றும் இப்பகுதியில் மக்கள் குடியமர்ந்த காரணத்தால் இப்பகுதி “தூர்த்தகுடி” தூத்துக்குடி” என்றும் பெயர் மருவியும் காணப்படுகின்றது.

'குடி' என்பது மக்கள் வாழும் குடியிருப்பைக் குறிக்கும். மேலும் பண்டைய கால கட்டத்தில் இவ்வூரில் ஆறுகள் ஏதுவும் இல்லாமல் இருந்ததால் கிணறுகளே நீராதாரமாக இருந்தன. கிணறுகளைத் தோண்டி (தூர்த்து) நீராதாரம் அமைத்து மக்கள் வாழ்ந்ததால் தூர்த்துக்குடி என்று இருந்ததாகவும் பிற்காலத்தில் மருவி தூத்துக்குடி என பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. வாணிபம் இப்பகுதியில் நடைபெற்றதால் தூது + குடி (தூது – அனுப்புதல்) என்ற பொருளில் தூது குடி என்றும் அழைக்கப்படுகின்றது.

தூத்துக்குடிக்குப் புராணச்சிறப்பு வாய்ந்த திருமந்திர நகர் என்ற பெயர் உண்டு. சீதையைத் தேடி இராமன் இலங்கை செல்லும் வழியில் இந்த கடற்கரைப்பகுதியில் அமர்ந்து சிவபெருமானை நினைத்து திருமந்திரங்களை உச்சரித்து தவம் செய்யத் தொடங்கினார். அப்போது கடலலைகளின் பேரிரைச்சல் ஒலி இராமபிரானின் தவத்திற்கு இடையூராக இருந்தது. இதனால் கோபமடைந்த இராமர்,

முந்துற்ற இராகவன்முன் மந்திரங்கள் செபித்திடவே முனிந்து நோக்கிச் சிந்துவைநீ யிரையாதே யென்றவன்றான் சபித்ததனாற் செறிந்த வூழி வந்தாலு மிரையாத திருமந்திர நகரின்கண் மகிழ்ந்து வாழுஞ்

சந்தமுறு சங்கரரா மேசுரனே யெமையாளுஞ் சதுர னேகாண்." (யுத்தகாண்டம் பா.78)

என்று இராமன் கடலலைகள் சத்தமின்றி ஒலிக்க செய்து திருமந்திரங்களை உச்சரித்த இடம் என்பதால் 'திருமந்திர நகர்' என்று பெயர் வந்துவிட்டது என்று கூறுவர். அவ்வகையில் தூத்துக்குடி கடலலைகளின் சத்தம் ஆராவாரமின்றி அமைதியாக ஒலிப்பதும் இன்றும் காணப்படும் செய்தி என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடிக்கு முத்துநகர் என்ற பெயரும் உண்டு. பழங்காலமாக மீன்பிடிப்பு தொழில் செய்து கொண்டிருக்கும் பரதவ இன மக்கள் கடலுக்கடியில் சென்று முத்து எடுக்கும் தொழிலையும் செய்து வந்தனர். இம்மக்கள் நேரிடையாக முத்துக்குளித்தலில் ஈடுபட்டதால் இத்துறைமுகநகரம் 'முத்துக்குளித்துறை' என்ற பெயரிலும் அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடியின் அழியா புகழ்

தூத்துக்குடி வீரம் விளைந்த மண். இம்மண்ணில் வாழும் மக்கள் இயற்கையாகவே தவற்றை தட்டிக் கேட்கும் வீரமும் நாட்டுப்பற்றும் உடையவர்கள். இதற்குச் சான்றாக முதன் முதலில் ஆங்கிலேயரை எதிர்த்து போர்க்கொடி தொடுத்து பாஞ்சாலங்குறிச்சியைத் தலையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த வீரமும் தீரமும் நிறைந்த மண் இது என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரத்தில் தோன்றி ஆங்கிலேயர்களின் ஏகபோக ஆதிக்கத்தை எதிர்த்து ”1906 அக்டோபர் 16-இல் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தை (Swadeshi Steam Navigation Company) தொடங்கினார். 'எஸ்.எஸ். காலியோ', 'எஸ்.எஸ். லாவோ' ஆகிய சுதேசி கப்பல்களை” தோற்றுவித்த கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மண் என்று போற்றப்படும் பெருமைக்குரிய வ.உ சிதம்பரனார் வாழ்ந்த பூமி இது. மேலும் கட்டலாங்குளத்தைச்சேர்ந்த மாவீரன் அழகுமுத்துகோன், ஊமைத்துறை மற்றும் செவத்தையா, மாவீரன் வெள்ளையத்தேவன் மற்றும் வீரன் சுந்தரலிங்கம், வ.ஊ.சியின் நெருங்கிய நண்பர் சுப்பிரமணிய சிவா போன்ற நம் நாட்டிற்கு உழைத்த செம்மல்கள் வாழ்ந்த மண் தூத்துக்குடி என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி மக்களின் மரபுவழி சிறுத்தெய்வ வழிபாடு

பண்டைய காலம் தொட்டே தமிழர் பண்பாடுகளுள் ஒன்று நடுகல் வழிபாடு. நடுகல் என்பதை ஆங்கிலத்தில் “Hero stone“, என்றும் “Memorial Stone“ என்றும் குறிப்பிடுவர். தமிழில் வீரக்கல், வீரன்கல், நடுகல் என்றும் நினைவுத் தூண் என்றும் குறிப்பிடுவர்.இந் நடுகல் வழிபாடு என்பது தன்நாட்டிற்காக வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபாடு செய்தல் மரபு. இதனை,

”காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்

சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்

றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்

சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தேழு (தொல்.புறத். நூ. 5)

எனத் தொல்காப்பியர் நடுகல் வழிபாட்டிற்கு இலக்கணம் கற்பிக்கிறார். இந்த நடுகல் வழிபாடு பிற்காலத்தில் முன்னோர் வழிபாடாக மருவி இன்றும் இவ்வழிபாடு நடந்தேறி வருகிறது என்பது மரபு சார் உண்மை எனலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் இந்நடுகல் வழிபாடு பரவலாக இருப்பதை, ”வழிபாட்டில் பூவுடையார் அய்யனார், ஆயிரங்காவு அய்யனார், படைப்போர் அய்யனார், சடகோபல் அய்யனார், பொன்னும்பெருமாள் அய்யனார், பச்சைப்பெருமாள் அய்யனார், அருஞ்சுனை அய்யனார், கருக்குவேல் அய்யனார், இளம்பாளை அய்யனார், வணங்காமுடி அய்யனார், குன்னிமலை அய்யனார், தூத்துவால் அய்யனார், மானாடு அய்யனார், தலையூனி அய்யனார், பொன்வண்டு அய்யனார், பலவேசமுத்து அய்யனார், மருதமலை அய்யனார், அல்லியூத்து அய்யனார், குட்டிசாத்தான் அய்யனார், தூசிமுத்து அய்யனார், கோட்டைவாழ் அய்யனார், இல்லங்குடி அய்யனார், தலகாணி அய்யனார், மணிமுத்து அய்யனார், மற்றும் பலபெயர்களில் தங்களுடைய இருப்பிடங்களை கண்டறிந்து பூஜைகள் பெறுகின்றனர்.மேலும் ஐவர் ராஜாக்கள், குலசேகரராஜா, சிவனிணைந்த பெருமாள் ராஜா, வெங்கலராஜா, உடையார் சுவாமி, கிழக்கித்துமுத்துசாமி, சரிகுலப்பெருமாள் சாமி, உலகுடையபெருமாள் சாமி, பாதகரை சாமி, பட்டாணி சாமி, பனையடி சாமி, உள்ளிட்ட தெய்வங்களும் வழிபாட்டில் உள்ளனர்.”

அதோடு மட்டுமின்றி ”இத்தெய்வங்களுடன் இருபத்தொரு துணை தெய்வங்களும் இருப்பார்கள். தவசுத் தம்பிரான், பத்திரகாளி, பரமராக்கித்தி, சிவனிணைந்தபெருமாள், தளவாய்மாடசாமி, சுடலைமாடன், காத்தவராயன், வன்னியராயன், பாவாடைவராயன், பட்டவராயன், பெரியதம்பி, சின்னதம்பி, கருப்பன், முன்னடியான், பின்னடியான், முண்டன், பேச்சியம்மன், இசக்கியம்மன், பலவேசக்காரன், முனீஸ்வரன், சங்கிலிமாடன் இவ்வாறு மேற்கண்ட பெயர்களுடனோ அல்லது சிறிதளவு மாற்றத்துடனோ இருக்கும்.” என்று முனைவர் தவசித்து மாறன் அவர்கள் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார் என்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது. ஆக நடுகல் வழிபாட்டைத் தூத்துக்குடி மக்கள் காலங்காலமாக செய்து வருகின்றனர் என்பதற்கு இத்தெய்வங்கள் சான்று பகர்கின்றன எனலாம்.

பாரம்பரிய ஆன்மீக விழாக்கள்

தூத்துக்குடி மக்கள் பக்தியில் மேம்பட்டவர்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்த கோயில் சிறப்புக்களைக் கொண்டு இம்மாவட்டத்தை நவதிருப்பதி என்கின்றனர். ”இந்தக் கோயில்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டுமே அமைந்துள்ளன. ஸ்ரீவைகுண்டம், நத்தம், திருக்கோளூர், திருப்புளியங்குடி, ஆழ்வார் திருநகரி, தென்திருப்பேரை, பெருங்குளம், தொலைவில்லி மங்கலத்தில் இரண்டு கோயில்கள் என 9 வைணவத் தலங்கள் உள்ளன” என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடியில் உள்ள உலகப்புகழ் பெற்ற பனிமய மாதா பேராலயத்தில் 444 ஆண்டு காலமாக பெரும் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் நடைபெறுகிறது. ”திருவிழா நாள்களில் உலக நன்மை, உலக சமாதானம், மாணவர்-மாணவிகள் கல்வி மேன்மை, வியாபாரிகள், மீனவர்கள், பனைத் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்குமான சிறப்பு திருப்பலிகள், நற்கருணை பவனி நடைபெறும். 10 ஆம் நாள் விழாவில் நகர வீதிகளில் பனிமய அன்னையின் திருவுருவ தேர் பவனி நடைபெறும்”(தினமலர், ஆகஸ்ட் 2026) என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி மாவட்டத்தில் குலசேகரபட்டினத்தில் அமைந்துள்ள ஞானமூர்த்திஸ்வரர் உடனுறை முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. மைசூருக்கு அடுத்தபடியாக இந்தியாவில் தசரா பண்டிகையை மிகவும் பெருமிதத்துடன் கொண்டாடும் தலம் இதுவே. அக்டோபர் மாதத்தில் நவராத்திரி கால கட்டத்தில் பத்து முதல் பதினொறு நாட்கள் இவ்விழா நடைபெறும். மகிஷாசுரனை அன்னை பராசக்தி வதம் செய்ததையே, தசரா திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். ஆசிய கண்டத்திலேயே அதிகமான மக்கள் ஒன்றாகக் கூடும் திருவிழாவாக இவ்விழா திகழ்கிறது. நம் நாட்டில் குலசை தசரா திருவிழா ஆசிய விருது பெற்ற ஒரே இந்தியகோவில் என்ற பெருமைக்குரியது. இவ்விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தங்களின் வேண்டுதல் நடக்க சிவன், பார்வதி, துர்க்கை, காளி, அனுமன், முருகன் போன்ற பலவிதமான வேடங்கள் அணிந்து நேர்த்திக்கடன் செலுத்துவர். இதனை உறுதிசெய்யும் வகையில்,

”முத்தாரம்மா எங்க முத்தாரம்மா / ஆதி சக்தி எங்க முத்தாரம்மா

முத்தாரம்மா எங்க முத்தாரம்மா / ஆதி சக்தி எங்க முத்தாரம்மா

கத்துங்கடல் தத்தளங்க / கர மேல எங்க முத்தாரம்மா

முத்து முத்தா கேட்ட வரம் / அள்ளி தரும் எங்க முத்தாரம்மா

ஆயிரம்மா வேஷம் போட்டு / கோடி சனம் கூடி வரும்

ஆனந்தமா முத்தாரம்மா / காட்சி தரா பாருங்கம்மா

கொடுத்து வச்ச பூமியம்மா / குலசை நகரின் முத்தாரம்மா” (முத்தாரம்மன் பாடல்கள் பா. 15)

என்று நெல்லை கவிநேசன் முத்தாரம்மனைப் புகழ்ந்துபல பாடல்கள் எழுதியுள்ளார். மேலும் நாட்டுப்புற வழக்கில் பின்பற்றப்படும் கதை பாடல் வடிவிலும் முத்தாரம்மன் கதை பாடல்களை உலகத் தமிழாராச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. விழாவின் நிறைவு நாளில் மகிஷாசூரசம்ஹாரம் நடைபெறும்.

மேலும் 2000 ஆண்டுகள் பழமையாக திருச்செந்தூர் கோவில் முருகனின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாக திகழ்வது. முருகப்பெருமானுக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஒரே படைவீடு தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள திருச்செந்தூர்

என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நடைபெறும் சூரசம்ஹாரம் மிகவும் சிறப்புவாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பண்பட்ட நாகரிகம்

தூத்துக்குடி மக்கள் தொன்மை வாய்ந்தவர்கள், மரபு வழி மாறாதவர்கள் என்பதற்கும் டிதான்று தொட்டு வாழ்ந்தவர்கள் என்பதற்கும் ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள ஆதிச்சநல்லூர் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ”ஆதிச்சநல்லூரில், கி.பி 1876 ஆம் ஆண்டிலிருந்தே தொல்லியல் ஆய்வுகள் நடந்துவருகின்றன. 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் மரித்தவர்களை, முதுமக்கள் தாழியில் வைத்து அடக்கம் செய்யப்படும் முறை இருந்துள்ளது. இங்கு சுமார் 1000 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன” என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், சங்க இலக்கியத்தில்,

“முத்துபடு பரப்பின் கொற்கை முன்துறை (நற். பா.23- 6)

”கொற்கையஞ் பெருந்துறை முத்து” (அகம். பா. 276)

என்ற பாடல் வரிகள் ”பாண்டியர்களின் தலைநகரமாகவும், முக்கியத் துறைமுகமாகவும் கொற்கை விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

நம்பிக்கைகள்

நம்பு என்ற சொல்லுக்கு விருப்பம், விருப்பு, பற்று, ஆசை, நம்பிக்கை கொள், எதிர்பார் போன்ற அகராதிப் பொருள்கள் காணப்படுகின்றன. "Belief என்ற ஆங்கிலச் சொல் நம்பிக்கை” என்ற பொருளில் பயிலப் பெற்றதை (Chidambaranathan chettiar (Ed) English, Tamil Dictionary p. 81) ஆங்கில அகராதி உணர்த்துகிறது. பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியனவாகும். "ஒரு பிரச்சினையின் மூலமாக நாம் அறிந்து கொள்ளும் உண்மையை விரும்பி ஏற்றுக் கொள்ளுதலே பொதுவாக நம்பிக்கை எனப்படும். ஆனால் நுட்பமாகவும் சமய ரீதியாகவும் பார்க்கும்போது ஒரு மனிதனின் மனிதத் தன்மைகளையும் விருப்பத்தையும் பொறுத்தே இது அமைகிறது" (Encyclopeedia of American, Vol. III, P. 469). " மனிதன் இயற்கைத் தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலேயே நம்பிக்கைகள் தோன்றின எனலாம். அச்சம், அவா, அறியாமை முதலிய பல காரணங்களால் தோன்றியிருக்கலாம்" (தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை, ப. 11) என்று கோ.அருட்கலை அவர்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இறை நம்பிக்கையுடைய இப்பகுதிமக்கள் கொடை விழா கொண்டாடுகின்றனர். இவ்விழாவில் மதிய கொடை சாமியாட்டம் (அருள்வாக்கு) போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் முன் பரதவ சமூக மக்கள் கடலை ”கடல் மாதா” என்று தெய்வமாக நம்பிக்கை கொண்டு வழிபடுவர். இது போலவே விவசாய தொழில் புரியும் மக்கள் முதல் முதலில் ஏர் பூட்டும்போது ”நல்லேர் பூட்டுதல்” என்ற சடங்கு செய்வர். இந்த சடங்கு நல்ல மழை பொழிவு வேண்டியும், நிலத்தை நம்பி செய்யும் விவசாயம் நல்முறையில் விளைச்சளைக் கொடுக்க வேண்டும் என்பதன் பொருட்டு செய்யப்படுகிறது.

சகுனம் பற்றிய நம்பிக்கை இவர்களிடம் இருந்தது. நல்ல காரியங்களுக்கு வெளியே செல்லும்போதும், ஒரு தொழில் தொடங்க போகும் போதும், சுப நிகழ்வு போதும் சகுனம் பார்த்தனர். கண்ணேறு பற்றிய நம்பிக்கையும் இவர்களிடம் பரவலாக இருந்தது. ”கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது” என்பது நாட்டுப்புற பழமொழி. இதனை, ”இப்பொழும் பழக்கத்திலிருக்கின்ற ஒரே பில்லிசூனிய வடிவம் கண்ணேறு கழித்தல் தான்” (Folklore and Folklife P. 226) என்று அமெரிக்க நாட்டுப்புறவியலறிஞர் ரிச்சர்டு கூறுவது குறிப்பிடத்தக்கது. பறவைகளின் ஒலி பற்றிய நம்பிக்கையும், பல்லி சத்தம் கேட்டல் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். வீட்டில் செடி வளர்க்கும்போது, ”வீட்டுக்கு ‘தூரமான’ பெண்கள் கறிவேப்பிலைச் செடிக்குப் பக்கத்தில் போனாலே பட்டுப்போகும் என்று கரிசல் வட்டார மக்களின் நம்பிக்கையயாக இருந்ததை கி.ரா. தனது நம்பிக்கைகள் பரிவாரங்கள் என்ற சிறுகதையில் பதிவு செய்திருக்கிறார். மேலும், இந்த நம்பிக்கைக்கு “இனிமேல் கறிவேப்பிலைக் கன்று வைத்தால், வீட்டுக்கு தூரமான பெண்டுகளைக் கொண்டு நடச் சொல்லுங்கள்” என்று ஒரு பாட்டி கூறுவதாகப் பதிவு செய்திருப்பது நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளை கூறுவதோடு அவற்றிற்கு பரிகாரமும் செய்ய வழிவகை செய்திருப்பது மக்களின் தெளிவை கதை நுட்பமாக எடுத்தியம்புகிறது எனலாம். மேலும் வாசல்படியில் அமரகூடாது, அம்மி ஆட்டுக்கல் மேல் அமர கூடாது என்றும் அப்படி அமர்ந்தால் அம்மி ஆட்டுக்கல் தேய்வது போல தேய்ந்து விடுவர் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தனர். மேலும் பிறப்பு முதல் இறப்புவரை தூத்துக்குடி மக்கள் பலவிதமான பாரம்பாரிய நம்பிக்கை கொண்டிருந்ததோடு அவற்றை இன்றும் பின்பற்றுபவர்களாக இருப்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது.

பண்பாடும் பழக்கவழக்கமும்

தூத்துக்குடியில் பல இனம், மொழி சார்ந்த மக்கள் வாழ்ந்தாலும் அவர்களிடம் ஒற்றுமை மேலோங்கி விளங்குகிறது. இந்து, இஸ்லாம், கிறிஸ்த்துவம் மற்றும் ஜைனம் போன்ற பிற மதங்களைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதும், விழாக்களில் ஒருமித்து கலந்து கொள்வதும் இப்பகுதிக்கே உண்டான நம் நாட்டவர் என்ற மண்மணமே எனலாம். தூத்துக்குடி உணவு வகையில் மிகவும் பிரபலமானது மீன் குழம்பு, கருவாட்டுக்குழம்பு, உளுந்தங்களி மக்ரூன் போன்றவைகளைக் குறிப்பிடலாம். கடின உழைப்பாளிகள். விருந்தோம்பலில் இன்முகத்தோடு வரவேற்று விருந்து அளிக்கும் பண்பு உடையவர்கள். நெய்தல் நில மக்கள் தங்களை நாடி வரும் விருந்தினர் இரவில் வந்தாலும் ”நெல்சோறு அயிரை மீன்புளிக்களி (அகம். ப. 60) கொடுத்து மகிழ்ந்தனர் என்ற செய்தியை சங்க இலக்கியம்வழி அறியமுடிகிறது. இவர்கள் மொழியில் ஏலே... வாப்பா.... வட்டார வழக்கு சொற்கள் அதிகமாகப் பயின்று வரும். கூட்டுக்குடும்பமாக வாழும் பண்பினராக வாழ்கின்றனர். சுற்றத்தாருடனும் நண்பர்களுடனும் இணக்கமாகப் பழகும் பண்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் வளம்

தூத்துக்குடி மாவட்டம் துறைமுகப்பகுதியாக விளங்குவதால் இப்பகுதி தொழில் மேம்பாடு பெற்றுத் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. மரபுத்தொழிலாக மீன் பிடித்தல், உப்புக்காய்ச்சுதல் முத்துக்குளித்தல், மட்பாண்டங்கள் செய்தல், பாய் பின்னுதல், கைத்தறி நெசவு முதலிய தொழில்களை செய்தனர். "ஆறுமுகநேரி, தூத்துக்குடி, வேம்பார், முத்தையாபுரம், முள்ளக்காடு பகுதிகளில் 25,000 ஏக்கருக்கு மேல் உப்பு விளைவிக்கப்படுகிறது. நம் நாட்டிலேயே உப்பு உற்பத்தியில் தூத்துக்குடி மாவட்டத்துக்கு இரண்டாவது இடம். ஆண்டுக்கு 25 லட்சம் டன்னுக்கும் மேல் உற்பத்தியாகிறது" என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்நகரம் உப்பு நகரம் என்றும் அழைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், "ஆசியாவிலேயே மிகப்பெரிய அனல் மின் நிலையம் (தூத்துக்குடி அனல் மின் நிலையம்), ஸ்பிக் (SPIC) உரத்தொழிற்சாலை மற்றும் பருத்தி நூற்பாலைகள் இங்கு அமைந்துள்ளன. மேலும் இப்பகுதி கடலோரப் பகுதியாக இருப்பதால் பாரம்பரிய மீன்பித் தொழிலுடன் சேர்ந்து கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்யும் தொழில் உலகத் தரம் வாய்ந்த அளவில் நடைபெற்றுவருவது தூத்துக்குடிக்கு மேலும் பெருமை சேர்க்கிறது எனலாம்.

தொழில்வளம் இருப்பினும் ஏழைகள் ஏழையாகவும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் வாழும் சூழல் இருப்பதை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஊருக்கெல்லாம் நெசவு செய்து துணி கொடுக்கும் நெசவாளி தனக்கென்று ஒரு வேட்டியை நெசவு செய்து கொள்ள முடியாத அளவிற்கு வறுமையில் வாழ்கிறார். கிழிந்த வேட்டியை உடுத்தி இருக்கும் நிலையில் சுதந்திர தின வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்கு நிதி வசூலிக்க வருகிறார்கள் "பரபரப்போடு எழுந்து நின்று இடது கையால் வேட்டியின் பிய்ந்த கிழிசலை மறைத்துக்கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானார்" (வேட்டி –சிறுகதை, ப.201) தூங்கா நாயக்கர்" என்று சிறுகதை சொல்லுதலை ஊற்று நோக்குவதும் அவசியமாகின்றது.

தொகுப்புரை

தூத்துக்குடி மக்கள் மரபுவழி நடப்பவர்கள் மட்டும் அல்ல. மனித நேயமுடனும் நாட்டுப்பற்றுடனும் நடப்பவர்கள். உறவுகளோடு பின்னிப்பிணைந்து வாழும் இவர்கள் போல கடின உழைப்புடனும் , மனிதநேயத்துடனும், நாட்டுப்பற்றுடனும் வாழ்வோம்... நல்லனவற்றை நம் தலைமுறைக்கு விட்டுச்செல்வோம். வாழ்க வளமுடன்.... வாழ்க தேச ஒற்றுமை...

துணை நின்ற நூல்கள்

References

தேவகோட்டை பி நாராயணன், ed. (1987). தமிழ் நாடு சுற்றுலா: சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நூல். அருணோதயம். p. 111.

2 தொல்காப்பியம்.

நற்றிணை

அகநானூறு
கம்பராமாயணம்
தினமலர்
கி.ரா. சிறுகதைகள் (வேட்டி, நம்பிக்கை பரிவாரங்கள்)
வாழ்வியல் களஞ்சியம்
Folklore and Folklife
Encyclopeedia of American
Chidambaranathan chettiar (Ed) English, Tamil Dictionary
தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை
முத்தாரம்மன் பாடல்கள்
www.google.com
https://www.facebook.com/Tamilnaduweatherblog/